**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.13**

**தேதி: 04.10.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **செந்தில்குமார்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **வெள்ளையன்** | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். மேற்படி மருத்துவக்கல்லூரியில் 2013ம் வருடம் பணிபுரிந்த மருத்துவர் நிரஞ்சன் தற்போது மேற்படி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியில்லை. அவர் எங்கிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. எனவே கோப்பின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். கடந்த 20.02.2013ம் தேதி சிவகங்கை தாலுகா காவல் நிலையக் குற்ற எண்.120/2013 வழக்கு சம்பந்தமாக பெயர் அடையாளம் தெரியாத பிரேதம் ஒன்றை சம்பவயிடத்தில் வைத்து பிரேத பரிசோதனை செய்ய சிவகங்கை தாலுகா காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அப்போது பணியாற்றியுள்ள மருத்துவர் திரு.நிரஞ்சன் அன்று சம்பவயிடமான பனங்காடி காட்டிற்கு சென்று மதியம் 02.15 மணியளவில் போலீசார் அடையாளம் காட்டியதின் அடிப்படையில் இறந்து போன நபரது உடலை பிரேத பரிசோதனை செய்துள்ளார். அச்சமயத்தில் பிரேதத்தின் எலும்புக்கூடு மட்டுமே காணப்பட்டுள்ளது. பிரேதத்தை சுற்றி துணியோ வேறு எதுவும் காணப்படவில்லை. அந்த எலும்புகளை சேகரம் செய்ததில் ஒரு தலை எலும்பு, இரண்டு தொடை எலும்பு, இரண்டு கால் எலும்புகள் எரிந்த நிலையில் காணப்பட்டுள்ளது. அவற்றை சேகரம் செய்து மரபணு பரிசோதனைக்காக காவலர் மூலம் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் கிடைக்கப்பெற்ற அந்த டிஎன்ஏ சம்பந்தமான அறிக்கையின் அடிப்படையில் மேற்படி எலும்புகள் ஒரு ஆண் நபரது எலும்புகள் என்றும் அது ஜெமிலியாகிரேஸ் என்பவருடைய தகப்பனாருடைய எலும்புகள் என்றும்

மருத்துவர் திரு.ராஜவேலு இறுதி அறிக்கை கொடுத்துள்ளார். மருத்துவர் நிரஞ்சன் கொடுத்துள்ள பிரேத பரிசோதனை அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவர் ராஜவேலு கொடுத்த இறுதி அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலித்த வகையில் எலும்புக்கூடு முழுமையாக இருந்திருக்கவில்லை என்று சொன்னால் அதுசரிதான். நீதிமன்றம் மூலமாக எலும்புகள் அனுப்பி வைத்ததாக காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பிரேத பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் பார்க்கும் போது மேற்படி நபர் பிரேத பரிசோதனை நடைபெற்றதற்கு முன் எத்தனை நாட்களுக்கு முன்பாக இறந்திருக்கக்கூடும் என்று கேட்டால் அந்த அறிக்கையில் அது பற்றி குறிப்பிடவில்லை. மேற்படி நபர் எவ்வகையில் இறந்தார் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடவில்லை.